செய்தி வெளியீடு எண். 151 நாள்: 17.03.2018

## டேராடுனில் உள்ள இராஷ்ட்டிரிய இந்திய இராணுவக் கல்லூரியில் 2019 ஜனவரி பருவத்தில் சேருவதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது – மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் வெளியிடப்பட்ட விளம்பர எண். 490 அறிவிக்கை எண். 01/2018–ன்படி டேராடுனில் உள்ள இராஷ்ட்டிரிய இந்திய இராணுவக் கல்லூரியில் 2019 ஜனவரி பருவத்தில் சேருவதற்கான 2018-ம் ஆண்டு ஜூன் மாதம் 1 மற்றும் 2-ம் தேதிகளில் தேர்வு நடைபெறுவது:

டேராடுனில் உள்ள இராஷ்ட்டிரிய இந்திய இராணுவக் கல்லூரியில் 2019 ஜனவரி பருவத்தில் மாணவர்கள் சேருவதற்கான தேர்வு இந்திய நாட்டில் குறிப்பிட்ட சில இடங்களில் 2018-ம் ஆண்டு ஜூன் மாதம் 1 மற்றும் 2-ம் தேதிகளில் நடைபெறவிருக்கிறது. சென்னை நகரிலும் இத்தேர்வு நடைபெற உள்ளது. இத்தேர்வு எழுத்துத் தேர்வு மற்றும் பொதுத் தேர்வு ஆகிய இரண்டும் கொண்டதாக இருக்கும். எழுத்துத் தேர்வு ஆங்கிலம், கணக்கு மற்றும் பொது அறிவு ஆகிய தாள்கள் கொண்டது. கணக்குதாள் மற்றும் பொது அறிவுத் தாள் ஆகியன ஆங்கிலத்தில் அல்லது இந்தியில் விடையளிக்கப்பட வேண்டும். நேர்முகத் தேர்வானது விண்ணப்பதாரர்களின் அறிவுக் கூர்மை, தனித்தன்மை போன்றவை ஆராய்வதாக இருக்கும். எழுத்துத் தேர்வின் அடிப்படையில் தகுதியானவர் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு மட்டும் 04.10.2018 அன்று நேர்முகத் தேர்வு நடத்தப்படும். நேர்முகத் தேர்வு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். ஒவ்வொரு பாடத்திலும் தேர்வு பெற நேர்முகத் தேர்வு உட்பட குறைந்தபட்ச மதிப்பெண்கள் 50 விழுக்காடு ஆகும்.

இத்தேர்விற்கான விண்ணப்ப படிவம், தகவல் தொகுப்பேடு மற்றும் முந்தைய தேர்விற்கான வினாத்தாள் தொகுப்பை “கமாண்டன்ட் இராஷ்ட்டிரிய இந்திய இராணுவக் கல்லூரி, டேராடுன், உத்ரகாண்ட், அஞ்சல் குறியீட்டு எண். 248 003” என்ற முகவரிக்கு விரைவு அஞ்சல் வாயிலாக எழுத்து மூலம் விண்ணப்பித்து, கமாண்டன்ட், இராஷ்ட்டிரிய இந்தியக் இராணுவக் கல்லூரி, டேராடுன் அவர்களுக்கு உத்ரகாண்ட், டேராடுன், டெல்பவன், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கிக் கிளையில் (வங்கிக் குறியீடு – 01576) செலுத்தத்தக்க பொதுப்பிரிவினர் ரூ.600-க்கான மற்றும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினர் சாதிச்சான்றுடன் ரூ.555-க்கான கேட்புக் காசோலையை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். ஒளிநகல் எடுக்கப்பட்ட இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரி ஹாலோகிராம் (Hologram) முத்திரையிடப்படாத விண்ணப்ப படிவங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பதாரர்களின் (சிறுவர்களின்) (ஆண் மாணவர்கள் மட்டும்) பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர் தமிழ்நாட்டில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் 01.01.2019 அன்று 11 ½ வயது நிரம்பியவராகவும் 13 வயதை அடையாதவராகவும் இருத்தல் வேண்டும். அதாவது அவர்கள் 02.01.2006-க்கு முன்னதாகவும் 01.07.2007-க்கு பின்னதாகவும் பிறந்திருக்கக்கூடாது. இந்த வயது வரம்பில் எந்த தளர்த்தலும் கிடையாது. விண்ணப்பதாரர் மேற்குறிப்பிட்ட இராணுவக்

கல்லூரியில் சேர அனுமதிக்கப்படும் பொழுது அதாவது 01.01.2019-ல் அங்கீகரிக்கப் பெற்ற பள்ளியில் (Recognised School) ஏழாம் வகுப்பு படிப்பவராகவோ அல்லது ஏழாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் (இரட்டையாக) தேர்வுக் கட்டுப்பாடு அலுவலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், பிரேசர் பாலச் சாலை, வி.ஓ.சி. நகர், சென்னை-600 003 என்ற முகவரிக்கு 31.03.2018 அன்று மாலை 05.45 மணிக்குள் வந்து சேர வேண்டும். மேலும், மற்ற விவரங்களுக்கு இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரியின் இணையதளத்தை அதாவது www.rimc.gov.in –ல் பார்க்கவும்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**